2. தகவல் கோரல்

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் குறித்து

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் இரண்டு பொருள்கள் குறித்து கவன ஈர்ப்பு கொடுத்திருந்தேன். அந்த இரண்டையும் தலைவரவர்கள் நிராகரித்திருக்கின்றீர்கள். ஒன்று. இந்த ஜீவன்தாரா திட்டத்தின்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கவன ஈர்ப்பை நிராகரிப்பது என் உரிமை.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: இல்லை, சார், நீங்கள் கொடுங்கள், சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள் முதலிலே, கவன ஈர்ப்பை நிராகரிப்பது என் உரிமை. நீங்கள் அதைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக முதலமைச்சர் கவனத்திற்குக் கொண்டு வருவது என்றால், அதை வேண்டுமானால் நீங்கள் பேசலாமே ஒழிய, கவன ஈர்ப்பை நீங்கள் நிராகரித்து விட்டீர்கள் என்றால், அது என் உரிமை. அதை நீங்கள் அவையிலே சொல்லக்கூடாது. பேசுங்கள்.

(ஆ) ஜீவன்தாரா திட்டக் கிணறுகளுக்கு மின் இணைப்பு வழங்குதல் மற்றும் கொடைக்கானல், பண்ணைக்காடு பகுதிகளில் ஏற்பட்ட மலைச் சரிவால் பாதிக்கப்பட்டோருக்கு வீடு கட்டித் தருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: அதை வாபஸ் வாங்கிக் கொள்கிறேன். மாண்புமிகு தலைவரவர்களே, நாம் கிணறு வெட்டப் பணம் கொடுக்கிறோம். ஜீவன்தாரா திட்டத்தின் மூலம் ஆதிதிராவிடர்களுக்கு 42,000 ரூபாய் கொடுக்கிறோம், 2 ஏக்கர் வைத்திருப்பவர்களுக்கு. அதேபோன்று, ஏழையாக இருக்கின்ற பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கும் கொடுக்கின்றோம், இனாமாக. . அப்படிக் கொடுக்கும்பொழுது இந்த ஆதிதிராவிட மக்களுக்கு மட்டும் உடனடியாக நாம் மின்சார இணைப்பைக் கொடுக்கின்றோம். அதில் இன்னொரு ஆள் கிணறு வெட்டுகிறானே, அந்த ஏழை, அவனுக்கு இல்லை என்று நிராகரிக்கின்றோம். அதில் என்னைப் போன்றவர்களுக்கு மிகவும் தர்மசங்கடமான நிலைமை

1996 ஆகஸ்ட் 10] [திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்]

இருக்கின்றது. ஆகையினாலே 2 ஏழைகளையும் ஒன்றாக நினைத்து, அவர்களுக்கு அந்தச் சலுகை அளிக்க வேண்டுமென்பது ஒன்று.

இன்னொன்று, அதேபோன்றுதான் வீடுகட்டுவதிலே, மலையிலே மழை பெய்து மலைச்சரிவு ஏற்படுகிறது, கொடைக்கானல், பண்ணைக்காடு போன்ற பகுதிகளிலேயெல்லாம். அவர்கள் கீழே வந்து வத்தலக்குண்டிலே குடியேற வருகிறார்கள். அப்படி வரக்கூடிய அவர்களுக்கு அரசாங்கமே ஹவுசிங் சொசைட்டி மூலமாக நிலத்தை அக்கொயர் பண்ணி வீடுகளைக் கட்டிக்கொடுப்பதற்கான ஒரு முயற்சி எடுத்துக் கொள்ளப்படுமா என்பதைத்தான் நான் அறிய விரும்புகிறேன். அதற்குத் தயவு செய்து பதில் சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எந்த அமைச்சர் பதில் சொல்லுவது?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அம்மையார் அவர்களுடைய இரண்டு கருத்துக்களும் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

(இ) சென்னை, நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. அருகில் உள்ள கோல்ஃப் விளையாட்டுத் திடலை குத்தகைக்கு விடுதல்

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அண்ணா சாலையில் நந்தனம் பகுதியில் ஒய்.எம்.சி.ஏ.விற்கு அடுத்திருக்கிற கோல்ஃப் விளையாட்டுத் திடல் தமிழக அரசுக்குச் சொந்தமான ஒரு இடம். புகழ்மிக்க காஸ்மாபாலிடன் கிளப்புக்கு அரசு கடந்த 60 ஆண்டுக் காலமாக அதை குத்தகைக்கு விட்டிருந்தது. இப்பொழுது அந்த இடத்தை குத்தகைக்குப் பெறுவதற்கு வேறு சிலர் முயற்சி செய்து கொண்டிருப்பதாக பத்திரிகைகளிலே செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, இனி யாருக்கு அது குத்தகைக்கு விடப்படும் என்பதில் அரசு முடிவு எடுத்துவிட்டதா என்பதை மாண்புமிகு முதல்வரவர்கள் இங்கே அறிவிப்பாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பத்திரிகையிலே வந்துள்ள செய்திகளை வைத்துக்கொண்டு மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள்